ஈரோடு வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(மாவ), அவர்களின் செயல் முறைகள்
பிறப்பிப்பவர்: திருமதி.வே.தீபா, M.Sc.,M.Phil.,

செ.மு.ந.க.2549/2017/அ1 நாள்: 17.12. 2018

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - சேலம் வணிகவரி கோட்டம் ஈரோடு வணிகவரி மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-2016ம் ஆண்டுக்கான தொகுதி- IVல் அடங்கிய சுருக்கெழுத்து தட்டச்சர் பட்டியல் வரப்பெற்றது - செல்வி.சி.கீர்த்தனா, சுருக்கெழுத்து தட்டச்சர், துணை ஆணையர்(மாவ) அலுவலகம், ஈரோடு - பணியேற்பு ஆணை வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன் முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-6 அவர்களின் கடிதம் எண்: 1403/பி.எஸ்.டி-சி1/2017 நாள்: 09.08.2017.
2. இணை ஆணையர் (மா.வ.), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செ.மு.ந.க.5955/2017/அ2 நாள்: 17.10.2017.
3. இவ்வலுவலக செ.மு.ந.க.2549/2017/அ1-III நாள்: 03.11.2017.

******

ஆணை:

பார்வை 1ல் காணும் கடிதத்தின் படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-2016ம் ஆண்டுக்கான தொகுதி- IVல் அடங்கிய தேர்வின் மூலம் தெரிவு செய்து பார்வை 2-ல் காணும் இணை ஆணையர் (மா.வ), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறை ஆணைகளின் படி, ஈரோடு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை-3ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின் படி பணி நியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்து கொண்டுள்ள இவ்வலுவலக சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு கீழ்கண்டுள்ளவாறு பணி வரன்முறை செய்தும் தகுதி காண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் பெயர் மற்றும் பதவி | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்து கொண்ட நாள் | பணி வரன் முறை செய்து தகுதி காண் பருவம் துவக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | செல்வி.சி.கீர்த்தனா, சுருக்கெழுத்து-தட்டச்சர். | துணை ஆணையர்(மாவ), ஈரோடு | 09.11.2017 முற்பகல் | 09.11.2017 முற்பகல் |

மேலும் இப்பணியாளர் பணியில் சேர்ந்த நாளான 09.11.2017 முதல் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதி காண் பருவத்தினராக இருக்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

(ஒம்/.)வே.தீபா,
துணை ஆணையர்(மா.வ),
ஈரோடு.

//உண்மை நகல்/உத்தரவுப்படி//

17/12/18

மாநிலவரி அலுவலர்/மேலாளர்

பெறுநர்:

செல்வி.சி.கீர்த்தனா,
சுருக்கெழுத்து-தட்டச்சர்,
துணை ஆணையர்(மாவ) அலுவலகம்,
ஈரோடு.

நகல்: இணை ஆணையர்(மாவ), சேலம் கோட்டம், சேலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.